**MCOP.No. 62/2023**
**Date : 7.01.2025**
**Pw– 1**
**பெயர்: ராசு (எ) ராஜேந்திரன்**
**த/பெ:**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்துக்கு காரணம் என்மீது இருந்தாலும் அல்லது எதிர்த்தரப்பு வாகனத்தை ஓட்டியவர் மீது இருந்தாலும் இந்த வழக்கில் அதற்கு தகுந்தாற்போல் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று கேட்டுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்மீது வாகனம் மோதியதில் மோதிய வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் வாகனத்தின் விபரம் குறித்து தெரியாமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் விபரம் தெரியாமல் தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற தர்மராஜ் என்பவர் வேலான்குடிபட்டி கிராமத்தை சேர்ந்தவர். எனது ஊர் இளையாவயல் கிராமம் ஆகும். திருச்சி – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலை தென்வடல் ரோடு என்று சொன்னால் சரிதான். மேற்படி ரோட்டிற்கு கிழக்கு பக்கமாக தான் இளையாவயல், வேலான்குடிபட்டி கிராமங்களுக்கு செல்லும் ரோடு பிரிந்து செல்கிறது என்று சொன்னால் சரியதான். மேற்படி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து உள்ளடங்கிய வகையில் தான் மேற்படி கிராமங்கள் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். இளையாவயல் கிராமத்திற்கும் கிழக்கில் தான் வேலான்குடிபட்டி கிராமம் உள்ளது. வேலான்குடிபட்டி கிராமத்திலிருந்து தர்மராஜ் அவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் திருச்சி மெயின்ரோட்டிற்கு வரும்போது தான் நான் என்னுடைய கிராமத்தில் நின்றிருந்தபோது அவரை நிறுத்தி மேற்படி இரு சக்கர வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து கொண்டு நானும் திருச்சி மெயின் ரோட்டிற்கு வந்தேன். மேற்படி தர்மராஜ்க்கு சொந்தமான அந்த இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் TN 55 AE 9511 என்று எனது மனுவில் குறிப்பிட்டிருப்பது சரியானதுதான். என்னுடைய மனுவில் காலம் எண் 14ல் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 55 AE 9511 எண் கொண்ட பல்சர் இரு சக்கர வாகனம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி விபத்திற்கு நான் பயணம் செய்த மேற்படி இரு சக்கர வாகனம் தான் காரணம் என்று என்னுடைய மனுவில் குறிப்பிட்டிருப்பதால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நான் நஷ்டஈடு கோர கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. திருச்சி – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையானது எந்நேரமும் அதிக வாகன போக்குவரத்து கொண்ட சாலை என்று சொன்னால் சரிதான். மேற்படி சாலையை கடக்கும் சமயத்தில் வாகன போக்குவரத்தை கவனித்த பிறகு தான் சாலையை கடக்க வேண்டுமென்று சொன்னால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் வாகனத்தை தர்மராஜ் ஓட்டிச்செல்ல நான் பின்னால் அமர்ந்து வந்ததால் விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். இளையாவயல் ரோட்டிலிருந்து மேற்படி தேசிய நெடுஞ்சாலையில் வடக்கு பக்கமாக திரும்பும் போது இரு சக்கர வாகனம் எதிரே வந்த காரின் எந்த பகுதியில் மோதியது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னுடைய வயதை குறிப்பிட்டு காட்டுவதற்கு நான்

சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எனது வயது குறித்த குறிப்பு எதுவும் இல்லை. மனுவில் எனது வயதை உத்தேசமாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னாலும் சரிதான். நான் மாதம் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வருமானம் பெறுவதாக கூறுவதற்கு என்னிடம் கணக்கு விபரம் எதுவும் இல்லை. நான் உடையமழவராயன்பட்டியிலுள்ள ஒரு கட்டிட மேஸ்திரியிடம்தான் உதவியாளராக இருந்தேன். அவர் தற்போது உயிரோடு உள்ளார். எனக்கு சம்பளம் கொடுத்த விபரம் அவருக்கு தெரியும். மேற்படி விபரத்தை எனது மனுவில் குறிப்பிடவில்லை. விபத்து நடந்தவுடன் நான் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டேன். ஒருநாள் மட்டும் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். 07.11.2022 தேதியில் மேற்படி மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சிகிச்சையை மேற்படி மருத்துவமனையில் பராமரித்து வரும் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து கொண்டார்கள். விபத்துக்கு முன்பு திருச்சியிலுள்ள GVN மருத்துவமனை இருந்து வருகிறதா என்று எனக்கு தெரியாது. நான் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்தபோது எனக்கு போதுமான சிகிச்சை அளிப்பதற்கு அங்கு வசதியில்லை என்று என்னிடம் யாரும் கூறவில்லை. அரசு மருத்துவமனையில் என்னை GVN மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளும்படி என்னிடம் கூறவில்லை. நான் வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கு அரசு மருத்துவமனையில் வேண்டுகோள் விடுத்தேன். நானாகதான் அரசு மருத்துவமனையில் இருந்து வெளியேறி வேறு மருத்துவமனைக்கு சிகிச்சை எடுத்துக்கொள்ள சென்று விட்டேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்டுள்ளதாக சொல்லும்காயங்களுக்கும் நான் கோரியுள்ள நஷ்ட ஈடுக்கும் அதிக முரண்பாடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியுள்ளபடி விபத்து எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

<u>2ம்எதிர்மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள மருத்துவரசீதுகள் சம்மந்தமாக சம்மந்தப்பட்ட மருத்துவமனை அலுவலர்களை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்று சொன்னால் அந்த மருத்துவரசீதுகள் உண்மையானது தான். நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பகுதி மற்றும் நிரந்தர ஊனம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/–ராசு (எ) ராஜேந்திரன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.